2. அறிவிப்புகள்.

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ் நாடு சட்டப் பேரவையின் 6 (1)-வது விதியின்படி கீழ்க்கண்ட உறுப்பினர்களைப் பேரவையின் மாற்றுத் தலைவர்களாக நான் நியமிக்கிறேன்.

1. திரு. என். கணபதி.
2. திரு. என். டென்னிஸ்.
3. திரு. ஆ. கு. சுப்பையா.
4. திரு. கே. ஏ. வகாப்.
5. திரு. நா. வீராசாமி.
6. திருமதி. த. ந. அனந்தநாயகி.

3. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) தமிழ் நாடு, 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 51/71.)

THE HON. THIRU P. U. SHANMUGHAM : Mr. Speaker, Sir, I rise to present the Report of the Select Committee on the Tamil Nadu General Sales Tax (Fifth Amendment) Bill,* 1971 (L.A. Bill No. 51 of 1971).

(ஆ) தமிழ் நாடு, 1972-ம் ஆண்டு ஏற்புப் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1972-ம் ஆண்டு ஏற்புப் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவை நான் இந்தப் பேரவையின் திருமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச் சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

---

* Published in the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated 20th October 1971.